## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

மூதூர் பிரதேச சபையின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானச் செலவுக் கணக்கு, காசுப்பாய்ச்சல் கூற்று, உரிமை மாற்றக் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் ஏனைய விளக்கமளித்தல் தகவல்களின் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை அதிகாரச் சட்டத்தின் 172 (1) ஆம் உப பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எமது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் தரப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து, நிதிக்கூற்றுக்கள் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மூதூர் பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச்செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சலை உள்ளூராட்சி நிறுவனத்திற்கான பொதுவாக ஏற்றுக்கொள்ளப்படும் கணக்கீட்டு நடைமுறைகளுக்கு இணங்க உண்மையாக மற்றும் நியாயமாக வெளிப்படுத்துகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு நான் நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்தினை வெளிப்படுத்துகின்றேன்.
இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க என்னால் கணக்காய்வு செய்யப்பட்டது. இக்கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்பு, இந்த அறிக்கையின் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் என்ற பகுதியில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் வகையில் என்னால் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வு சான்றுகள் போதியளவானவை மற்றும் பொருத்தமானவை என்பது எனது நம்பிக்கையாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் சம்பந்தமாக முகாமைத்துவத்தினதும் தொடர்புபட்ட நிருவகிக்கின்ற தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க தயாரித்தலும் நியாயமாகச் சமர்ப்பித்தலும் மற்றும் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்ற நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு இயலுமான வகையில் தேவையான உள்ளகக் கட்டுப்பாட்டினைத் தீர்மானிப்பது முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.
பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான பொறுப்பு, நிருவகிக்கின்ற தரப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்படும்.
2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சொந்த வருமானங்கள், செலவுகள் சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

### 1.4 கணக்காய்வின் நோக்கெல்லை (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமாக கணக்காய்வாளரின் பொறுப்பு)

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் அற்றவை என்பதற்கான உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் அதன் பொருண்மையான தன்மையானது இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் அமுல்படுத்தப்படுகின்ற பொருளாதார தீர்மானம் தொடர்பான ஏற்படுத்துகின்ற தாக்கத்தின் அடிப்படையில் தங்கியுள்ளது.
இலங்கை கணக்காய்வு நியமத்தின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக என்னால் கணக்காய்வின் போது தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் நடவடிக்கை எடுக்கப்பட்டது. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ்

கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பதற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் ஆகிய காரணங்களினால் ஏற்படுவதினாலாகும்.

- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான அறிவு பெற்றுக் கொள்ளப்பட்டது.

- பயன்படுத்தப்படுகின்ற கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தத் தன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை, முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளின் வெளிப்படுத்தல்கள் என்பன மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களுக்காக அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளன எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

  இயலுமான வகையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக கணக்காய்வு நோக்கெல்லை விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களைச் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள் நடைமுறைகள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாகவும் பேணிச் செல்லப்படுகின்றதா எனவும்,

- உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையின் வழங்கப்பட்ட ஏனைய பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க பிரதேச சபையின் நிறுவனம் செயற்படுகின்றதா எனவும்,

- தனது அதிகாரங்கள், கடமைகள், மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா எனவும், வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதா எனவும் ஆகும்.

### 1.5 ஏனைய சட்ட ரீதியான தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் கீழே குறிப்பிட்ட தேவைப்பாடுகள் சம்பந்தமாக விசேட ஏற்பாடுகள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

(அ) பிரதேச சபையின் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் கடந்த வருடத்தை ஒத்திருந்தன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6(1)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் கடந்த வருடத்தில் என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் முன்வைக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

### 1.6 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பது சம்பந்தமான கணக்காய்வு அவதானிப்புக்கள்

#### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் கணக்கீட்டு குறைபாடுகள் அவதானிக்கப்பட்டுள்ளன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|---|
| அ) | ரூபா760,000 கிரயப் பெறுமதியுடைய வாகனம் ரூபா 150,000 ற்கு அகற்றப்பட்டிருந்த பெறுமதியை மோட்டார் வாகனக் கணக்கிலிருந்து கழிப்பனவு செய்யப்பட்டிருந்தது. | ஏதிர்வரும் ஆண்டுக்கான கணக்கறிக்கையில் சீர்செய்யப்படும். | கணக்கு சீர் செய்யப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| ஆ) | இயந்திர உபகரணங்களின் மூலம் கிடைக்கப் பெற்ற வருமானம் மற்றும் பிரதேச சபைக்குரித்தான சுற்றாடல் பாதுகாப்பு உரிமக்கட்டண(EPL) வருமானம் என்பவற்றின் கூட்டுத்தொகையான ரூபா 160,400 இனை வருமானமாக காண்பிப்பதற்குப் பதிலாக மீளளிக்கத்தக்க வைப்பாக காண்பிக்கப்பட்டிருச்தது. | சபையின் தீர்மானத்துடன் குறுக்குப்பதிவு மூலம் சபைவருமானத்திற்கு மாற்ற நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. | சபைக்குரித்தான வருமானங்கள் உரிய காலப்பகுதிக்கு கணக்கீடு செய்யப்படல் வேண்டும் |
| இ) | மூதூர் சிறுவர் பூங்காவிற்கு உபகரணங்கள் பொருத்துதல் வேலைத்திட்டத்திற்கு கூட்டுமொத்தம் ரூபா 3,895,402 செலவிடப்பட்டிருப் பினும் நிலையான சொத்துக்களின் பெறுமதிக்குள் உள்வாங்கப் பட்டிருக்கவில்லை | மூலதனச் செயற்திட்ட செலவுத் தொகை ரூபா 3,895,402 இனை 2023 ஆம் ஆண்டுக்கான கணக்கறிக்கையில் சீர்செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் | நிலையான சொத்துக்களின் பெறுமதியில் சேர்த்துக் கொள்ள உரிய நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும் |
| ஈ) | மீளாய்வாண்டில் பிரதேச சபைக்கு அன்பளிப்பாக பெற்றுக் கொள்ளப்பட்ட கூட்டுமொத்தம் ரூபா 406,699 ஆன உபகரணங்கள் கணக்குகளிற்கு எடுத்து வரப் பட்டிருக்கவில்லை. | மொத்தத் தொகை ரூபா 406,699 ஐ 2023ம் ஆண்டுக்கான இறுதிக்கணக்கறிக்கையில் சீர் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் | நிலையான சொத்துக்களின் பெறுமதியில் சேர்த்துக் கொள்ள உரிய நடவக்கைகள் எடுக்கப்படல் வேண்டும் |
| உ) | மீளாய்வாண்டின் திசெம்பர் மாதத்திற்குரிய ரூபா 4,510,204 சம்பளக் கொடுப்பனவுகள் மற்றும் சபை உறுப்பினர்களுக்கான கொடுப்பனவுகள் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை | இனிவரும் காலங்களில் இவ்வாறான கொடுப்பனவுகள் வருமதியான வைப்பாக நிதிக்கூற்றில் வெளிப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும். | வருமதியாக காட்டப்பட உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும் |

### 1.6.2 கணக்காய்விற்காக எழுத்துமூலச் சான்றுகள் இல்லாமை

| வழங்கப்படாத கணக்காய்வுச் சான்றுகள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|
| மீளாய்வாண்டின் திசெம்பர் 31இல் உள்ளவாரு காணப்பட்ட கூட்டுமொத்தம் ரூபா 203,987,206 தொகையான 3 கணக்கு மீதிகள் உரிய பதிவேடுகள், காணி உறுதி, நிலையான சொத்து பதிவேடுகள், மீதியை உறுதிப்படுத்தும் ஆவணங்கள், மற்றும் மீள்மதிப்பீட்டு ஆவணங்கள் சமர்ப்பிக்காமையின் காரணமாக திருப்திகரமாக உறுதிப்படுத்தமுடியாதுள்ளது | பூரணப்படுத்தப்பட்டு தங்களுக்கு சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதுடன் காணி கட்டடங்களுக்கு, உறுதி எடுத்தல், பதிவேடுகளை பராமரித்தல் போன்ற நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. | நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட ஒவ்வொரு விடயங்களிற்கும் சான்றாதாரங்கள் சமர்ப்பிக்க நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும் |

### 1.7 இணக்கமின்மைகள்

### 1.7.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைகள்

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவ தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கீழே தரப்படுகின்றன.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவ தீர்மானங்கள் என்பவற்றுக்கான தொடர்பு | இணக்கமின்மைகள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|---|---|
| (அ) | 1987 ஆம் ஆண்டின் 15 ம் இலக்க பிரதேச சபைகள் சட்டம் | | | |
| (i) | இல. 182 | 2021 ஆம் நிதியாண்டில் ஆரம்ப அரசிறை | உள்ளுராட்சி ஆணையாளர் | விடயத்திற்கு பொறுப்பான |

| | | | | |
|---|---|---|---|---|
| | | நிலுவையிலிருந்து ரூபா 2,324,357 தொகையானது பதிவழிக்கப்பட்டிருந்தது. மேற்படி பதிவழிப்புத் தீர்மானமொன்றிற்கு விடயத்திற்கு பொறுப்பான அமைச்சரின் அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை. | ஊடாக கௌரவ ஆளுநரிடம் அனுமதியினை பெற அனுப்பி வைக்கப் பட்டுள்ளது. | அமைச்சரின் அங்கீகாரம் பெற்றுக் கொள்ள உரிய நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும் |
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை | | | |
| (i) | நி.பி 371 | 15 வருடங்களிற்கு மேற்பட்ட முன்கொண்டுவரப்பட்ட ரூபா 11,129,351 முற்பணங்களேனும் இதுவரை தீர்க்கப்பட்டிருக்கவில்லை. | நீண்ட காலமாக காணப்பட்டுவரும் முற்பணத்தினை சீர்செய்வதற்கான அனுமதியினை கௌரவ ஆளுநரிடம் பெறுவதற்காக அனுப்பி வைக்கப் பட்டுள்ளது. | சீர் செய்ய உரிய நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும |
| (ii) | நி.பி 1645 | லொக் குறிப்பு புத்தகங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டிருந் தும் அவைகள் இற்றைப்படுத்தப்பட்டிருக்கவி ல்லை. | லொக் குறிப்பு இற்றைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | இற்றைப்படுத்த உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும் |
| (iii) | நி.பி 1646 | சபையின் பாவனையில் 14 வாகனங்கள் காணப்படுகின்ற போதிலும் நாளாந்த ஓட்டக் குறிப்புக்கள் கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்படவில்லை. | அனைத்து வாகனங்களுக்குமா ன நாளாந்த ஓட்டக் குறிப்புகள் உரிய திகதிக்குள் கணக்காய்வுக்கு சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும் |
| (இ) | ஏனைய சுற்றறிக்கை | | | |
| (i) | 2021.08.16 ஆம் திகதிய PT/03/2021 ஆம் இலக்க மாகாண நிதிச் சுற்றறிக்கை | பிரதேச சபையில் பணியாற்றுகின்ற, பாதுகாப்புப் பணம் ரூபா 83,000 அறவீடு செய்யப்பட வேண்டிய 16 உத்தியோகத்தர்களிடமிருந்து பாதுகாப்பு வைப்புப்பணம் அறவீடு செய்யப்பட்டிருக்க வில்லை. | பாதுகாப்பு வைப்புப் பணம் அறவீடு செய்ய வேண்டிய உத்தியோகத்தர்களி டமிருந்து அறவீடு செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். | பாதுகாப்பு வைப்புப் பணம் அறவீடு செய்ய உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும் |
| (ii) | 2008 பெப்ரவரி 25 ஆம் திகதி வெளியிடப்பட்ட 1553/16 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி | சூழல் பாதுகாப்பு அனுமதிப் பத்திரம் காலாவதியாகும் திகதிக்கு மூன்று மாதத்திற்கு முதலில் சூழல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரம் புதுப்பிக்க வேண்டிய போதிலும் மீளாய்வாண்டில் 44 சூழல் பாதுகாப்பு அனுமதிப் பத்திரம் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப் பட்டிருக்கவில்லை. | தங்களினால் சுட்டிக்காட்டப்பட்ட 2008 பெப்ரவரி 25 ஆம் திகதி வெளியிடப்பட்ட 1553/16 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி ஒழுங்கு விதிகளின் படி நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றது. | சுற்றறிக்கைக்கு அமைவாக உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும் |

**2.	நிதி மீளாய்வு**

**2.1	நிதி விளைவுகள்**

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவுகளை மிகைத்த வருமானங்கள் ரூபா 33,728,379 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவுகளை மிகைத்த வருமானம் ரூபா 24,690,240 ஆகும்

**2.2	வருமான நிருவாகம்**

**2.2.1	மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்**

சபையின் தவிசாளரினால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் படி மீளாய்வாண்டு மற்றும் முன்னையஆண்டிற்கான மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம், நிலுவை வருமானம் என்பன தொடர்பான தகவல்கள் கீழே தரப்படுகின்றன.

| | | 2022 | | | | 2021 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வருமான மூலம் | மதிப்பீடு செய்யப் பட்ட வருமானம் | பட்டியலிடப் பட்ட வருமானம் | சேகரிக்கப்ப ட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறான மொத்த நிலுவை | மதிப்பீடு செய்யப் பட்ட வருமானம் | பட்டியலிடப் பட்ட வருமானம் | சேகரிக்கப்ப ட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறான மொத்த நிலுவை |
| | | ரூபா ”000” | ரூபா ”000” | ரூபா ”000” | ரூபா ”000” | ரூபா ”000” | ரூபா ”000” | ரூபா ”000” | ரூபா ”000” |
| i) | வீதவரியும் வரியும் | 2,336 | 692 | 464 | 6,782 | 1,735 | 445 | 371 | 6,555 |
| ii) | வாடகை | 35,832 | 27,142 | 26,924 | 13,154 | 35,266 | 21,847 | 18,605 | 12,936 |
| iii) | உத்தரவுப் பத்திரக் கட்டணம் | 2,879 | 1,154 | 1,154 | 39 | 2,326 | 1,090 | 1,090 | 39 |
| iv) | ஏனைய வருமானம் | 2,452 | 1,208 | 1,208 | 406 | 2,116 | 999 | 999 | 406 |
| | | 43,499 | 30,196 | 29,750 | 20,381 | 41,443 | 24,381 | 21,065 | 19,936 |

**2.2.2	வருமானங்களை சேகரிக்கும் செயலாற்றல்.**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|
| அ) வீதவரி மற்றும் வரி | | |
| i) 1946 இன் 30 ஆம் இலக்க மதிப்பீடு மற்றும் மீளமதிப்பீட்டு சட்டத்தின 20 ஆம் பிரிவின் பிரகாரம் 5 ஆண்டுகளிற்கு ஒரு முறை ஆதனவரி மீள் மதிப்பீடு செய்யப்பட வேண்டியிருந்த போதும் 19 வருட காலமாக மீளமதிப்பீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | அனுமதி கோறப்பட்டுள்ளதென. | மதிப்பீட்டினை விரைவு படுத்தப்படல் வேண்டும் |
| ஆ) வாடகை | | |
| (I) பஸ்தரிப்பு நிலைய கடை வாடகை | | |
| i) 2022 திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறு 5 வருட காலத்திற்கும் மேலா கடை வாடகை நிலுவை ரூபா 1,165,422 ஆககு காணப்பட்டது. | நிலுவைகள் அறவிட்டுக் கொள்வதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. | நிலுவைகளை அறவிட உரிய நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும் |
| ii) 2014 ஆம் ஆண்டில் கைச்சாத்திட்ட வாடகை உடன்படிக்கையின் பிரிவு 2 இன் பிரகாரம் 2016 ஆம் ஆண்டிலிருந்து முன்னைய வாடகைப் பெறுமதியில் ஆண்டுதோறும் 10% அதிகரித்து வாடகையை அறவிட்டிருக்காமையினால் சபைக்கு ரூபா 455,383 வருமான இழப்பு ஏற்பட்டுள்ளது. | நிலுவைகள் முழுமையாக அறவிட நடவடிக்கைகள் எடுக்கப்படும். | ஒப்பந்தத்திற்கு அமைவாக வாடகையினை அறவிட நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும் |

(II) இறைச்சிக்கடை வாடகை

| | | |
|---|---|---|
| கோழி இறைச்சிக் கடைகளிடமிருந்து வாடகை அறவிடுவது தொடர்பில் பிரதேச சபை துணைவிதிகளில் எவ்வித ஏற்பாடுகளும் செய்யப்படாததுடன் வாடகை நிலுவையாக 2009 ஆம் ஆண்டு தொடக்கம் 2022 திசெம்பர் 31 வரை ரூபா 12,469,466 ஆக காணப்படுவதுடன் அதனை அறவிடுவிடப்பட்டிருக்கவில்லை | கோழி இறைச்சிக்கடை வாடகை நிலுவையை கௌரவ ஆளுநரின் அனுமதியின் பிரகாரம் பதிவளிப்புச் செய்ய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். | நீண்ட கால நிலுவைகளை சீர் செய்ய உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும் |

இ) **முத்திரைக் கட்டணம்**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | சிபார்சு |
|---|---|---|
| மாகாண சபையின் பிரதிச் செயலாளரிடமிருந்தும் ஏனைய உத்தியோகத்தரிடமிருந்து 2022 திசெம்பர் 31 இல் பெறப்பட வேண்டிய முத்திரைக் கட்டணம் ரூபா 4,548,533 ஆக காணப்பட்டது. | சீர் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் | முத்திரைக்கட்டணங்களை அழை பிட்டுக்கொள்ளப்பட வேண்டும் |

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|---|
| அ) | ரூபா 572,909 ஆன இலங்கை வங்கி மற்றும் மக்கள் வங்கி சேமிப்புக் கணக்கு மீதிகள் 13 வருடங்களிற்கு மேலாக செயற்படாதிருந்தது | சேமிப்புக் கணக்குகள் மூலம் கிடைக்கப் பெறும் வட்டியானது இறுதிக் கணக்கறிக்கைகளுக்கு கொண்டு வரப்படுகின்றது. எதிர்காலத்தில் இதனை நிலையான வைப்பிலிடுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும். | நிதியினை ஆக்கபூர்வமாக முதலிட நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். |
| ஆ) | 1980 ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்க நம்பிக்கை நிதிய (ETF) சட்டத்தின் 16 வது பிரிவிற்கமைய குறித்த காலத்தில் செலுத்தத் தவறியமையின் காரணமாக ரூபா 31,800 ஆன தண்டப்பணம் செலுத்தப்பட்டிருந்தது. | இனிவரும் காலங்களில் இவ்வாறான கொடுப்பனவு செய்வது தவிர்த்துக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்படுகிறது. | பங்கு பணம் உரிய காலப்பகுதியில் செலுத்தப்படல் வேண்டும் |

**3.2 பயன்படுத்தப்படாத மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட ஆதனங்கள்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|---|
| அ) | தோப்பூரில் ரூபா 4,967,426 பெறுமதியில் 2014 ஆம் ஆண்டு அமைக்கப்பட்ட 12 கடைகளைக் கொண்ட கடைத்தொகுதியை வாடகைக்கு வழங்க 08 ஆண்டுகளாக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | எதிர் காலத்தில் அவற்றை திருத்தி வாடகைக்கு வழங்க நடவடிக்கை எடுக்கப்படும். | உரிய நோக்கத்திற்கு பயன்படுத்த நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும் |
| ஆ) | சாம்பூரில் ரூபா 3,669,340 பெறுமதியில் 2017 ஆம் ஆண்டு நிர்மாணிக்கப்பட்ட சந்தைக்கட்டடம் 05 ஆண்டு காலமாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. | பொறுப்பேற்க வியாபாரிகள் முன்வராத காரணத்தினால் அதற்கான மாற்று ஒழுங்கு மேற்கொள்ளப்படும். | -மேற்படி- |
| இ) | மாகாண குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்தி நிதி ஒதுக்கீட்டின் கீழ் ரூபா 1,115,226 ஆன எரிவாயு (Bio Gas) திட்டத்தை நடைமுறைப் | எரிவாயு தயாரிப்பதற்கான கட்டடம் போதிய தொழிநுட்ப ஆலோசனை, மற்றும் இயந்திரங்கள் கிடைக்கப் பெறாததால் இயங்கவில்லை அதற்கான வளங்கள் | -மேற்படி- |

| | | | |
|---|---|---|---|
| | படுத்துவதற்கான கட்டிடம் 2016 திசெம்பர் 07 ஆம் திகதி ஒப்பந்தகாரரால் நிர்மாணிக்கப்பட்டு சபைக்கு கையளிக்கப்பட்டிருந்தும் இன்று வரை அத்திட்டம் செயற் படுத்தப்படாமல் கட்டிடம் விளைவற்றுக் காணப்படுகின்றது. | கிடைக்கப் பெறும் போது எதிர்காலத்தில் வாயு தயாரிப்பு வேலைகள் நடைபெறும். | |
| ஈ) | மாகாண குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்தி நிதி ஒதுக்கீட்டின் கீழ் ரூபா 2,589,515 பெறுமதியில் மூதூர் பொழுது போக்கு பூங்காவில் படகு நிறுத்தல் (Boat landing) வேலைத்திட்டமானது 2019 திசெம்பர் 06 இல் முடிவுறுத்தப்பட்ட போதிலும் இவ் அறிக்கை திகதி வரையிலும் விளைவற்றுள்ளது. | பலதடவைகள் முயற்சி செய்தும் இற்றை வரைக்கும் படகில் செல்வதற்கான அனுமதி கிடைக்கப் பெறவில்லை அனுமதி கிடைத்தவுடன் நடவடிக்கை மேற்கொள்ளப்படும். | -மேற்படி- |
| உ) | யுனிசெப் நிதிஒதுக்கீட்டின் கீழ் 2012 ஆகஸ்ட் 22 ஆம் திகதி சபைக்கு வழங்கப்பட்ட Sewerage Treatment Plant இனை இன்று வரை பயன்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை | தொழிநுட்ப ஆலோசனை மற்றும் இயந்திரங்கள் கிடைக்கப்பெறாததால் இயங்கவில்லை அதற்கான வளங்கள் கிடைக்கப் பெறும் போது எதிர்காலத்தில் நடவடிக்கை மேற்கொள்ளப்படும். | -மேற்படி- |

**3.3 சொத்துக்கள் முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|
| **பொறுப்பேற்கப்படாத சொத்துக்கள்** | | |
| நன்கொடையாக பெற்றுக் கொள்ளப்பட்ட 29 வாகனங்கள் சபையினால் பயன்படுத்தப்பட்டு வருகின்ற போதும் சபையின் பெயருக்கு உரிமை மாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பல வாகனங்கள் உரிமை மாற்றம் செய்யப்பட்டுள்ளபோதும் சில வாகனங்களை வழங்கிய திணைக்களங்கள், அமைச்சுக்கள் மாற்றம் வழங்கிய திணைக்களங்களை முறையாக இனங்காண முடியாதுள்ளதுடன் இவ்விடயம் தொடர்பாக கிழக்கு மாகாண பிரதம செயலாளரின் ஆலோசனையினைப் பெற்றுக்கொள்வதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. | உரிமை மாற்றம் செய்ய உரிய நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும் |

**3.4 மனித வளங்கள் முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|
| ஊழியர் கடன்கள் | | |
| அமைய ஊழியர் ஒருவருக்கு வழங்கப்பட்ட ரூபா 102,620 இடர்கடன் தொகையானது 11 ஆண்டுகளாகவும், மீளாய்வாண்டில் தீர்வு செய்யப்படவேண்டிய ரூபா 323,750 தொகை நிலுவையாக காணப்படுகின்றன. | மீளாய்வாண்டு தீர்வு செய்யப்பட வேண்டிய ரூபா 323,750 தொகையினை அறவீடுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் | நிலுவையினை தீர்வு செய்ய உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும் |

**4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**4.1 உள்ளகக் கணக்காய்வு**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | சிபார்சு |
|---|---|---|
| மீளாய்வாண்டில் சபையில் உள்ளக கணக்காய்வு உத்தியோகத்தர் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ள போதிலும், கணக்காய்வு நடவடிக்கைகள் எவையும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | 2020 ஆம் ஆண்டிலிருந்து உள்ளக கணக்காய்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வில்லை. | உள்ளகக் கணக்காய்வு நடவக்கைகள் மேற்கொள்ள உரிய நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும் |

**4.2 பாதீட்டுக் கட்டுப்பாடு**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|
| பாதிடப்பட்ட செலவுகளிற்கும் உண்மையான செலவினத் திற்குமிடையே 24% முதல் 81% வரையான வீச்சில் முரண்கள் அவதானிக்கப்பட்டன. எனவே பாதீடானது பயனுள்ள முகாமைத்துவ கட்டுப்பாட்டு கருவியாக பயன் படுத்தப்பட்டிருக்காமை அவதானிக்கப்பட்டுள்ளது. | பாதீடு மூலம் எதிர்பார்க்கப்பட்ட வருமானங்களை முழுமையாக பெறமுடியாமையினால் அதற்கான செலவீனங்களை மேற்கொள்ள முடியாமல் போயுள்ளது. | அதிக வீதத்தில் முரண்கள் தவிர்ப்பதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும் |